செ.வெ.எண்: 12
நாள்: 09.11.2018

# பத்திரிக்கைச் செய்தி

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் (யூ.ஒய்.இ.ஜி.பி) கடன் பெற விண்ணப்பிக்கலாம்!

தொழில் தொடங்க விழையும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தமிழக அரசின் வேலைவாய்ப்பு உருவாக்கும் (யூ.ஒய்.இ.ஜி.பி) திட்டத்தின் கீழ் கடன் பெற மாவட்ட தொழில் மையத்திற்கு விண்ணப்பிக்கலாம் என கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு த.ந.ஹரிஹரன்,** இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :

தமிழகத்தின் அனைத்து கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் யூ.ஒய்.இ.ஜி.பி என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழில்களை அதிகபட்சம் ரூ.10 இலட்சம் முதலீட்டிலும், சேவைத் தொழில்களை அதிகபட்சம் ரூ.3 இலட்சம் முதலீட்டிலும், வியாபார தொழில்களை அதிகபட்சம் ரூ.1 இலட்சம் முதலீட்டிலும் தொடங்கலாம். மேற்கண்ட மனுதாரர்களுக்கு மாநில அரசால் 25% மானியம் அதிகபட்சமாக ரூ.1,25,000/- வழங்கப்படும்.5 % சுய முதலீடு அவசியம்.

இத்திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க 18 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரின் குடும்ப ஆண்டு வருமானம் ₹1,50,000/--த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இக்கடன்கள் பெறுவதற்கு சொத்துப்பிணையம் தேவையில்லை. மேலும், இத்திட்டத்தில் விண்ணப்பிக்க பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதுரம்பு 35 ஆகவும், சிறப்பு பிரிவினருக்கு 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறைந்தது 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க www.msmeonline.tn.gov.in/uyegp/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பதாரருடைய தகவல்களை சரியாக பூர்த்தி செய்த பின்னர், பள்ளி மாற்றுச் சான்றிதழ், குடும்ப அடையாள அட்டை / ஆதார் அட்டை / தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட இருப்பிட சான்றிதழ், சாதி சான்றிதழ், விலைப்பட்டியல் (Quotation), ஆகியவற்றை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். பின்னர், பதிவிறக்கம் செய்து திட்ட அறிக்கை படிவத்தை பூர்த்தி செய்து கையொப்பமிட்ட விண்ணப்பம் மற்றும் உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றின் அசல் மற்றும் நகல் ஆகியவற்றை மாவட்ட தொழில் மைய அலுவலகத்திற்கு நேர்காணலுக்கு அழைக்கப்படும்போது சமர்பிக்க வேண்டும். மேலும், நேர்காணலின் போது மேற்கண்ட அனைத்து அசல் ஆவணங்களையும் சரிபார்க்க சமர்பிக்க வேண்டும்.

இந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 325 நபர்கள் ரூ.175 இலட்சம் மானியத்துடன் கூடிய ரூ.600 இலட்சம் முதலீட்டில் தொழில் துவங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வரிய வாய்ப்பினை படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்படுத்தி புதிய தொழில்கள் துவங்கி பொருளாதார ஏற்றம் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

25/X/18

மாவட்ட ஆட்சித்தலைவர்
கோயம்புத்தூர்

25.10.18